කෘෂිකර්ම අමාත්‍යාංශය

விவசாய அமைச்சு

**Ministry of Agriculture**

# ශ්‍රී ලංකා හදබිම අධිකාරිය

# இலங்கை ஹதபிம அதிகாரசபை

# HADABIMA AUTHORITY OF SRI LANKA





# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை

# ANNUAL REPORT

# 2015




# இலங்கை ஹதபிம அதிகாரசபை

## வருடாந்த அறிக்கை - 2015

த.பெ.இலக்கம் 09, கண்ணொறுவை, பேராதனை
தொலைபேசி இலக்கம : 0812-388107
தொலைநகல் : 0812-388132
மின்னஞ்சல் : authority.hadabima@gmail.com
இனையதளம : www.hadabima.gov.lk

# உள்ளடக்கம்

பக்க இலக்கம்


| | | |
|---|---|---|
| 01. | கௌரவ தலைவரது ஆசிச் செய்தி | 01 |
| 02. | நிறைவேற்றுப் பணிப்பாளரது ஆசிச் செய்தி | 02 |
| 03. | அறிமுகம் | 03-04 |
| 04. | இலக்கு மற்றும் நோக்கம் | 05 |
| 05. | நிர்வாகப் பிரிவின் தகவல்கள் | 06-10 |
| | • நிர்வாகப் பிரிவு – தாபன தகவல்கள் | 06-07 |
| | • பணிப்பாளர் சபை ஒன்றுகூடல்கள் இடம் பெற்ற திகதி | 08 |
| | • அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் | 09 |
| | • நிறுவன ஒழுங்கமைப்பு | 10 |
| 06. | 2015 ஆம் ஆண்டின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் | 11-18 |
| | • விவசாயிகளை வலுப்பெறச் செய்தல் | 11-12 |
| |   • ஆரம்ப பாதுகாப்பு திட்டமிடல் | 11 |
| |   • சமூக தலைமைத்துவ அபிவிருத்தி வேலைத்திட்டம் | 12 |
| |   • உழவர் சமூகத்தின் பொருட்டு மண்ணரிப்பு பாதுகாப்பு தொடர்பாக பயிற்சி வேலைத்திட்டம் | 12 |
| | • மண்ணரிப்பு பாதுகாப்பு மற்றும் நீர்வரப்பு முகாமை | 13-15 |
| |   • மண்ணரிப்பு பாதுகாப்பு மாதிரிகளை ஸ்தாபித்தல் | 13 |
| |   • "மாணவ அறிவு காப்பரன்" பாடசாலை சூழல் வேலைத்திட்டம் | 14 |
| |   • நீர் மூலங்கள் மற்றும் நீர் நிலைகளின் பாதுகாப்பு வேலைத்திட்டம் | 14 |
| |   • மண்ணரிப்பு பாதுகாப்பு கட்டமைப்பை ஸ்தாபித்தல் வேலைத்திட்டம் | 15 |
| | • திட்டமிடல் மற்றும் செயலாற்றுகை மீளாய்வு | 16 |
| | • நிறுவன மனித மற்றும் பௌதீக அபிவிருத்தி | 16 |
| | • ஊடக மற்றும் விளம்பர வேலைத்திட்டம் | 16 |
| | • விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் மேம்பாட்டு வேலைத்திட்டம் | 17 |
| 07. | சந்தை மேம்பாட்டு கருத்திட்டம் - 2015 | 18-24 |
| 08. | கணக்கீட்டு தகவல்கள் | 25-33 |
| 09. | கணக்காய்வுத் தகவல்கள் | 34-44 |
| | • கணக்காய்வு அறிக்கை | |

## தலைவரது ஆசிச் செய்தி



1972 இன் இலக்கம் 11 இனைக் கொண்ட விவசாய சட்டவாக்கல் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1978 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு இருந்த விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை எனக் குறிப்பிடப்பட்டிருந்த (நெட்சா) நிறுவனத்தை ஸ்தாபிப்பதன் பிரதான நோக்கமாக காணப்பட்டமையானது மத்திய மலை நாட்டிலும் மற்றும் அதனைச் சூழ உள்ள சூழலை மிகவும் உணர்வு பூர்வமாக நீர் போசனைப் பிரதேசங்களில் ஏற்படுகின்ற மண்ணரிப்பு நிலமையின் காரணமாக ஏற்படுகின்ற தேசிய சூழல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதாகும்.

1991 ஆம் ஆண்டு முதல் இலங்கை ஹுதபிம அதிகாரசபை (இலங்கை பச்சைப் புல்வெளி அபிவிருத்தி மத்திய அதிகாரசபை) மத்திய அதிகார சபையின் இலங்கை ஹுதபிம அதிகார சபையாக இந்த அதிகார சபையின் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டது. அவ்வாறு விஸ்தரிக்கப்பட்டமையானது அன்று காணப்பட்ட அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற விஷேட சூழல் வலுவூட்டல் ஆய்வு கற்கையின் பெறுபேற்றிலாகும். முதல் காலப்பகுதியில் உலக வங்கி மற்றும் உலக உணவு மற்றும் விவசாய ஒழுங்கமைப்பு (WHO) இன் ஊடாக இந்த நிறுவனத்திற்கு நிதி உதவி பெற்றுத் தரப்பட்டது. இந்த சகல உதவி தொகையும் பெற்றுத் தரப்பட்டமையானது சமூக பங்குபற்றுகையை பெற்றுக் கொண்டு அவர்களுக்கு உரிய காணி அலகில் மண்ணரிப்பு ஏற்படுவதை குறைத்துக் கொண்டு அக்காணி வலயமைப்பில் பாதுகாத்துக் கொள்வதற்காகவாகும். 2000 ஆம் ஆண்டு முதல் சர்வதேச நிதி நிறுவனத்தின் ஊடாக நிதி ஒதுக்கீடு அதிகார சபைக்கு கிடைக்கப் பெறாது இருந்ததுடன் அந்நாள் முதல் திறைசேரியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அதிகார சபையின் அபிவிருத்தி திட்டமிடல்களை தயார் செய்து அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அதற்கு அமைய 2015 ஆம் ஆண்டினை இலக்காகக் கொண்ட வருடத்தினுள் இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதன் பொருட்டு ரூபா 67.95 மில்லியன் திறைசேரியின் மூலம் இலங்கை ஹுதபிம அதிகார சபைக்கு பெற்றுத் தரப்பட்டது. அவ்வாறு பெற்றுக் கொண்ட நிதியினைப் பயன்படுத்தி கண்டி, மாத்தளை, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை மற்றும் பதுல்லை போன்ற மாவட்டங்களில் பிரதேச செயலாளர் பிரிவுகள் 40 இனை உள்ளடக்கியதாக விவசாய குடும்பங்கள் 12500 பேரினது பங்குபற்றுகையுடன் மண்ணரிப்பு மற்றும் மண் வளம் குறைதல் என்பன காரணமாக பயன்படுத்தாது கைவிடப்பட்ட காணிகள் 5750 ஹெக்டேயர் அளவு காணி பாதுகாக்கப்பட்டு அபிவிருத்தி செய்வதை இலக்காகக் கொண்டுள்ளது.

இந்த இலக்கினை அடைந்துக் கொள்வதன் நிமித்தம் இனங்காணப்பட்ட செயற்பாடுகளைப் போலவே உப செயற்பாடுகளும் அபிவிருத்தி அதிகார பிரதேசத்தினுள் செயற்படுத்தப்பட்டது. முன்னுரிமை அபிவிருத்தி செயற்பாடுகளான மண்ணரிப்பு பாதுகாப்பு கட்டமைப்பினை ஸ்தாபிப்பதை பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்ட செயலாற்றுகை 3113.2 ஹெக்டேயர் ஆகும். கள பதவியனியினரில் நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கையை போலவே பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ள காணிகள் அடையாளங் காணும் போது ஏற்படுகின்ற அவசியமற்ற தாமதங்கள் ஏற்படுவதால் நிலவிய அசாதாரன சூழல் காரணிகள் செயலாற்றுகையை ஏதோ ஒரு அளவு குறைவதற்கு காரணமாக அமைந்தது எனலாம். 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 37.79 மில்லியன் நிதி தொகை செலவு செய்யப்பட்டு இந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. அதற்கு அமைய விவசாய குடும்பங்கள் 12500 பேரினதும் சமூக பங்குபற்றுகையுடன் உச்ச அளவில் பெற்றுக் கொண்டு இந்த செயலாற்றுகையை அடைந்துக் கொள்ள முடியும் என்பது தொடர்பில் நான் சந்தோசப்படுவதுடன் இதன் பொருட்டு உதவி நல்கிய விவசாய அமைச்சர் கௌரவ துமிந்த திஸாநாயக்க அவர்கள் மற்றும் அவரது செயலாளர் உட்பட சகல உத்தியோகத்தர்களுக்கும் இலங்கை ஹுதபிம அதிகார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் உட்பட சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்தன ஹேரத்
தலைவர்
இலங்கை ஹுதபிம அதிகார சபை

# நிறைவேற்றுப் பணிப்பாளரது அசிச் செய்தி



சூழல் மற்றும் இயற்கை தொடர்பில் என்றெப் போதும் இல்லாதவாறு அதிகளவில் தற்போதைய காலப் பகுதியில் விரிவான அமைப்பில் அமையப் பெற்றுள்ளது. அதற்கு பிரதான காரணம் சமநிலையற்ற விதத்தில் காணப்படுகின்ற இயற்கையாகும். மானிட சமூகத்திற்கு விதிக்கப்படுகின்ற மாபெரும் தாக்கத்தின் காரணமாகும். சூழல் சமநிலையற்ற விதத்தில் காணப்படுகின்றமையினால் அறிவு மானிட சமூகத்திற்கு நேரடியாகவே பங்குகொள்ள முடியும். இயற்கைவள பயன்பாட்டின் போது மேற்கொள்ளப்படுகின்ற முறையற்ற செயற்பாடுகளைப் போலவே வளங்களை பயன்படுத்துகின்ற போதும் நிலையான வள முகாமைத்துவத்திற்கு இட்டுச் செல்லாமையினால் இந்நிலமைக்கு காரணமான முக்கிய காரணிகளாக விளங்குகின்றது. இதன் காரணத்தினாலே வெள்ளப்பெறுக்கு, மண்ணரிப்பு, காற்று. சூறாவளி, காலநிலை மாற்றம், எல்லினோ லானினோ நிலமை போன்ற காரணங்களினால் அழிவுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளதுடன் அதனால் ஏற்படுகின்ற சமூக பொருளாதார பாதிப்பு பெரிதும் தாக்கம் செலுத்துகின்றன.

இலங்கையின் இயற்கை சூழல் வளங்கள் நிலையான முகாமைத்துவத்தின் பொருட்டு நேரடியாக பங்குபற்றுகின்ற நிறுவனமாக அறிமுகப்படுத்தக்கூடிய ஒன்றாக விளங்குவது இலங்கை ஹதபிம அதிகார சபையாகும். ஏறத்தள மூன்று சகாப்த காலப் பகுதியிலும் மத்திய மலை நாட்டில் மற்றும் அதனை சூழவுள்ள பிரதேசங்களில் மண்ணரிப்பு நிலையை குறைத்துக் கொள்வதற்கு மற்றும் இயற்கை வள முகாமையின் பொருட்டு பங்களிப்பை வழங்கியுள்ளதுடன் 1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் பல்வேறு வளர்ச்சிக்குப் பின்னர் இது வரையிலும் மத்திய மலைநாட்டில் அன்மித்த 07 மாவட்டங்களை உள்ளடக்கியதாக பிரதேச செயலாளர் பிரிவுகள் 40 இனை உள்ளடக்கியதாக வியாபித்து செயற்படுகின்றது. பொது திறைசேறியின் ஊடாக அதிகார சபைக்கு பெற்றுத் தரப்படுகின்ற வருடாந்த நிதி ஒதுக்கீட்டின் அளவின் கீழ் வருடத்தின் அபிவிருத்தி தீர்மானிக்கப்படுகின்றது.

அதற்கமைய 2015 ஆம் ஆண்டு சமூகத்தின் பங்குபற்றுகையுடன் 5750 ஹெக்டேயர் மண்ணரிப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த செயற்பாட்டின் பொருட்டு பொது திறைசேரியினால் பெற்றுத் தரப்பட்ட நிதி தொகை ரூபா 67.95 மில்லியன் ஆகும். இந்த நிதியின் அளவு பயன்படுத்திக் கொண்டு இலக்காகக் கொண்ட வருடத்தினுள் 3113.2 ஹெக்டேயர் காணி மண்ணரிப்பு பாதுகாப்பு கட்டமைப்பை ஸ்தாபிப்பதற்கு இயலுமை கிடைக்கப் பெற்றுள்ளது. இதற்கு இணையாக செயற்படுகின்ற ஏனைய அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் ஊடாகவும் வெற்றிகரமான செயலாற்றுகையை பெற்றுக் கொள்ள இயலுமாக இருந்தது. இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கும் மேலாக இலங்கை ஹதபிம அதிகார சபையின் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் மேம்பாட்டு வேலைத் திட்டத்தின் ஊடாக விவசாய சமூகத்தின் விவசாய உற்பத்தியை நேரடியாக கொள்வனவு செய்வதைப் போலவே நகர நுகர்வாளர்களுக்கு சாதாரண விலைக்கு பெற்றுக் கொடுப்பதற்கு இந்த இரு தரப்பினருக்கும் சலுகை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

விவசாய அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சூழல் பாதுகாப்பிற்கு மற்றும் இயற்கை வள முகாமைத்துவத்திற்கும் நேரடியாகவே பங்களிப்பை பெற்றுக் கொடுக்கின்ற இலங்கை ஹதபிம அதிகார சபையின் அபிவிருத்தி திட்டமிடலை செயற்படுத்துவதன் பொருட்டு விவசாய அமைச்சரைப் போலவே விவசாய அமைச்சின் செயலாளர் உட்பட சகல பதவியனியினரினாலும் பெற்றுத் தரப்பட்ட பங்களிப்பை நான் பெரிதும் மெச்சுவதுடன் இலங்கை ஹதபிம அதிகார சபைக்கு தலைமைத்தவத்தைப் பெற்றுத் தந்த இந்த வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக மேற் கொள்வதற்கு இலங்கை ஹதபிம அதிகார சபையின் தலைவர் உற்பட சகல பதவியனியனரும் வழங்கிய பங்களிப்பை பெரிதும் மெச்சுகின்றேன்.

## அறிமுகம்

1972 இன் 11 ஆம் இலக்க விவசாய சட்டவாக்க கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1978 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட தேசிய விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியிருப்பு அதிகாரசபை (நெட்சா) என ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்த நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்களாவன.

1. விவசாய பல்வகைப்படுத்தல் குடியேற்ற மற்றும் நீர் நிலைப் பிரதேச அபிவிருத்தி
2. நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள காணி வளையமைப்பை உச்ச அளவில் திறனைப் பெற்றுக் கொள்வதன் நிமித்தம் சூழல் பாதுகாப்பு மற்றும் நீர் வள பாதுகாப்பு
3. விவசாய உற்பத்தியை திட்டமிடல் மற்றும் சந்தைப்படுத்தல் நிமித்தம் ஈடுபடல்
4. விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அபிவிருத்தியின் பொருட்டு தேவையாகின்ற உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பவற்றை வழங்குதல், பராமரித்தல், மற்றும் செயற்படுத்துதல்.

இந்த அதிகாரங்களை பயன்படுத்திக் கொண்டு அதிகார சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் 1978 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் முதலாவது கட்டமைப்பின் கீழ் மஹவலி நதிக்கு அன்மித்து அமைந்துள்ள பாரிய நீர் போசனைப் பிரதேசங்களில் உள்ள கிராமங்கள் மற்றும் மஹாநதி போசனைப் பிரதேசத்திற்கு உட்படும் பிரதேசம் சூழல் வலயமாகவும் மற்றும் கேகாலை மாவட்டத்தின் மா ஓயா நீர் போசனை பிரதேசத்திற்கு உரிய நீர் போசனை பிரதேசங்களின் பாதுகாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அங்கு காணி, காணி புணர்நிர்மான ஆணைக் குழுவிற்கு உரிய மண்ணரிப்பு காரணமாக கைவிடப்பட்டு இருந்த காணிகள் 5000 ஏக்கர் அளவினை பாதுகாப்பு செய்யும் இலக்கைக் கொண்டுள்ளது. இந்த விடயம் பொருட்டு அதாவது காணி அபிவிருத்தி பாதுகாப்பு பொருட்டு உலக வங்கி மற்றும் உலக உணவு ஒழுங்கமைப்பின் ஊடாக நன்கொடைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

குடியேற்ற நாடாக விளங்கும் காலத்தில் இந்த பிரதேசங்களில் மிகவும் செழுமையான வளங்கள் நாசம் செய்யப்பட்டதுடன் தோட்டப் பயிர்ச் செய்கையின் வருகையின் கீழ் குடியேற்ற யுகம் முடிவடைவதுடன் மண்ணரிப்பு மற்றும் மண் சரிவு காரணமாக கைவிடப்படும் நிலைக்கு அல்லது வளம்குன்றிய நிலைக்குள்ளான இந்த காணி வளையமைப்புக் காரணமாக பிரதேசத்தில் சமமின்மை காணப்பட்டது. இது தேசிய சூழல் பிரச்சினைக்கு இட்டுச் சென்றது எனலாம். இந்நிலமையை தவிர்த்துக் கொள்வதன் பொருட்டு உரிய பிரதேசத்தில் மாநதியுடன் ஒன்று சேறும் பிரதான ஆறுகள் 103 உடன் பிரதான நீர் போசனைப் பிரதேசம் இந்த வலயத்தில் அமையப் பெற்றிருப்பதாகும்.

அதற்கு அமைய இந்தப் பிரதேசத்தில் சூழல் பாதுகாப்பு அந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களது பங்குபற்றுகையில் உச்ச அளவில் பெற்றுக் கொள்ளப்படுகின்றமையை இலக்காகக் கொண்டு 5000 ஏக்கர் அளவு உற்பத்தி திறன் கொண்ட உற்பத்தி அலகாக மாற்றப்பட்டுள்ளன. கருத்திட்ட கால எல்லை முடிவுறுவதுடன் இந்த கருத்திட்டத்தின் ஊடாக சூழல் தொடர்பான ஆய்வு கற்கை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் அங்கு சிபாரிசு செய்யப்பட்டு இருப்பது, இந்த கருத்திட்டத்தின் ஊடாக நோக்காகக் கொண்ட எதிர்பார்ப்புக்களை அடையப் பெற்றுள்ளது எனவும், கருத்திட்டத்தை மேலும் செயற்படுத்துவதற்கும் மற்றும் கருத்திட்ட அதிகார பிரதேசம் மேலும் விஸ்தரிப்பதற்கும் தேசிய தேவைப்பாடு உள்ளது என்பதாகும்.

அதற்கு அமைய 1990 ஆம் ஆண்டு முதல் அதிகார சபையின் உத்தியோகபூர்வ பெயர் "இலங்கை பச்சைப் புல்வெளி அபிவிருத்தி மத்திய அதிகாரசபை" (இலங்கை ஹதபிம அதிகாரசபை) என திருத்தம் செய்யப்பட்டு இருந்தது. மத்திய மலைநாடு மற்றும் அது சார்ந்த மாவட்டங்களான மொனராகலை, பதுளை, நுவரெலியா, இரத்தினபுரி, மாத்தளை மாவட்டங்கள் மற்றும் கேகாலை மற்றும் கண்டி போன்ற மாவட்டங்களுக்கும் மேலாக கருத்திட்ட பிரதேசமாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அதிகார சபையின் பொருட்டு பெற்றுக் கொடுக்கப்பட்ட உலக உணவு கொடை பெற்றுக் கொள்ளப்பட்டது. உலக உணவு கொடை பெற்றுக் கொண்டமை முடிவுற்றதன் பின்னர் அன்று முதல் இன்று வரை அதிகார சபையின் நடவடிக்கைகள் திறைசேரியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படுவதை இலக்காகக் கொண்டமைந்துள்ளது எனலாம்.

அதற்கு அமைய இலக்காகக் கொண்ட 2015 ஆம் ஆண்டு அதிகார சபையினால் சமர்ப்பிகக்ப்பட்டுள்ள செயற்பாட்டு திட்டமிடலுக்கு அமைய திறைசேரியினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீட்டின் அளவு முலதனச் செலவு ரூபா 35.625 ஆக காணப்படுவதற்கும் மேலாக மீண்டு வரும் செலவினமாக ரூபா 58.732 மில்லியன் கிடைக்கப் பெற்றது. இந்த நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி 2015 ஆம் ஆண்டு கண்டி, மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் பதுல்லை போன்ற மாவட்டங்களில் அதிகார பிரதேச செயலாளர் பிரிவுகள் 40 ஐ உள்ளடக்கியதாக ஹெக்டேயர் 3000 நில அளவில் மண்ணரிப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படுவதை இலக்காகக் கொண்டிருந்தது.

அதற்கு அமைய அதிகார சபையின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதன் பொருட்டு செயற்படுத்தப்படுகின்ற செயற்பாடுகள் அபிவிருத்தி கருத்திட்டங்களின் செயலாற்றுகை இந்த செயலாறறுகை அறிக்கையின் ஊடாக சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

# இலக்கு

"மண்வளம் நிறைந்த பூமிதனில்,
வளம்மிக்க இந்தப் பூமியில் வளமான அறுவடைக்
கொண்டு நிரம்பிய நாடு"

# நோக்கம்

"மண்ணரிப்பு ஏற்படும் அவலத்தை நீக்கி மண்ணரிப்பு பாதுகாப்பின் ஊடாக பூமியை வளம் பெறச் செய்து வளமான வெற்றியை பெற்று உள்நாட்டு உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தி உள்நாட்டு விவசாய உற்பத்தியை மேம்படுத்துவதற்கு பங்குதாரராகுதல்"

# நிர்வாக அறிக்கை

# இலங்கை ஹதபிம அதிகார சபை

# 2015 வருடாந்த அறிக்கை

## நிர்வாகத் தகவல்கள்

### 01. பணிப்பாளர் சபை

| | | |
|---|---|---|
| 1. திரு.நந்தசேன ஹேரத் - தலைவர் | - | பணிப்பாளர் சபையின் தலைவர் |
| 2. திரு.ஜீ.அஜித் புஸ்பகுமார - உப தலைவர் | - | பணிப்பாளர் சபையின் உறுப்பினர் |
| 3. திரு.ரன்ஜன் தர்மவர்த்தன - அமைச்சின் பிரதி நிதி | - | பணிப்பாளர் சபையின் உறுப்பினர் |
| 4. திருமதி சான்தினி கொங்கஹகே. | - | பணிப்பாளர் சபையின் உறுப்பினர் |
| 5. திரு.டி.எம்.சிறிசேன திசாநாயக்க | - | பணிப்பாளர் சபையின் உறுப்பினர் |
| 6. திரு.டி.என்.டி.நுகவெல | - | பணிப்பாளர் சபையின் உறுப்பினர் |
| 7. திரு.எச்.எம்.பி.ஹிடிசேகர - திறைசேரியின் பிரதி நிதி | - | பணிப்பாளர் சபையின் உறுப்பினர் |
| 8. பேராசிரியர் எச்.எம்.எஸ்.ஹீன்கென்த- அமைச்சின் பிரதி நிதி | - | பணிப்பாளர் சபையின் உறுப்பினர் |

அதிகார சபையின் தலைவர் மற்றும் உப தலைவர் உற்பட அமைச்சின் பிரதி நிதிகளுடன் பணிப்பாளர் சபையின் ஏனைய உறுப்பினர்கள் உடன் ஏனைய பணிப்பாளர் உறுப்பினர்கள் யாவரையும் 2015 பெப்ரவரி மாதம் கௌரவ விவசாய அமைச்சரினால் நியமனம் செய்யப்பட்டனர்.

திறைசேரிப் பிரதிநிதியாக கண்டி மாவட்டத்தின் செயலாளர் திரு எச்.எம்.பீ.ஹட்டிசேகர அவர்கள் 2015 மே மாதம் முதல் அதிகார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார்.

விவசாய அமைச்சின் பிரதி நிதி திரு ரன்ஜன் தர்மவர்த்தன அவர்கள் விவசாய அமைச்சில் இருந்து நீங்குவதால் அதிகார சபையின் பணிப்பாளர் சபையில் இருந்து கேட்டு விலகுவதாக 2015.05.29 ஆம் திகதி இடம் பெற்ற 407 ஆவது பணிப்பாளர் சபை ஒன்று கூடலின் போது அறியத் தந்தார்.

விவசாய அமைச்சின் பிரதி நிதியாக மேலதிகப் பணிப்பாளர் (விவசாய தொழில்நுட்பம்) பேராசிரியர் திரு எச்.எம்.எஸ்.ஹீன்கெந்த அவர்கள் 2015 ஆகஸ்ட் மாதம் முதல் பணிப்பாளர் சபையின் பொருட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

### 02. பதவியணியினரின் விபரம்

1. 2015 ஆம் ஆண்டு அதிகார சபையின் தலைவராக நந்தசேன ஹேரத் அவர்களும் 2015.02.10 ஆம் திகதி முதல் உப தலைவராக திரு. ஜி.அஜித் புஸ்பகுமார அவர்களும் கடமை மேற்கொண்டார்கள்.
2. இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தரான திரு.ஜே.சீ.ரனேபுர அவர்கள் அதிகார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளராக 2015 ஆம் ஆண்டு கடமையில் இருந்தார்.
3. அதிகார சபையின் வெற்றிடம் நிலவிய பிரதிப் பணிப்பளார் (நிர்வாகம்) பதவியின் பொருட்டு கலேவலை பிரதேச செயலாளர் ஆக கடமை மேற்கொண்ட திருமதி.ஏ.எம்.சீ.கே. அதபத்து அவர்கள் 2015.04.01 ஆம் திகதி முதல் இரண்டாம் தர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்.

4. பிரதிப் பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவியின் பொருட்டு திரு வசன்த பண்டார திலகரத்ன அவர்கள் 2015.03.02 ஆம் திகதி முதல் நிலையான சேவையின் பொருட்டு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்.

5. உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவியின் பொருட்டு 2015.03.02 ஆம் திகதி முதல் திருமதி.ஏ.வி.ஹேமலதா அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

6. உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) ஆக திரு.டீ.எம்.ஏ.பி.தசநாயக்க அவர்களும், உதவிப் பணிப்பாளர் (கருத்திட்டம் மற்றும் திட்டமிடல்) ஆக திரு.பீ.ரி.எஸ்.டப்லியு குமார அவர்களும் உதவிப் பணிப்பாளராக (சந்தைப்படுத்தல்) ஆக திரு.இந்துனில் கே.வெலிகமகே அவர்களும் 2015 ஆம் ஆண்டு சேவைப் புரிந்தார்கள்.

## 03. நிறுவனத்திற்குரிய பௌதீக வளங்கள்

**கட்டடங்கள்**

1. அதிகார சபையின் பணிமனையை நடாத்திச் செல்கின்ற 46 பேர்ச்சஸ் காணியின் அறைப் பகுதி
2. பல்லேகலை பண்ணையை நடாத்திச் செல்லப்படுகின்ற 08 ஏக்கர் நிலப் பரப்பும்
3. கொத்மலை பண்ணையை நடாத்திச் செல்கின்ற 05 ஏக்கர் காணி நிலப் பரப்பும்
4. பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் 40 பேர்ச்சஸ் காணியின் அறைவாசியில் அமைந்துள்ள உத்தியோகத்தர் வாசஸ்தளம் உடனான காணி மற்றும் கட்டடம் என்பன அதிகார சபையின் உரித்தில் உள்ளது.
5. கண்ணொறுவை தோட்ட விஞ்ஞானப் பண்ணை அமையப் பெறறுள்ள கட்டடம் மற்றும் காணி 80 பேர்ச்சஸ் பகுதி அதிகார சபைக்கு உரித்தாக உள்ளது.

**வாகனம்.**

2015 ஆம் ஆண்டு ஆகின்ற போது அதிகார சபைக்கு உரித்தாக 11 கெப் வாகனங்களும், 01 கார், 01 பெஜ்ரோ பெரிய லொரி வாகனம் 01 மற்றும் சிறிய லொரி 01 உம், நிறுவனத்திற்கு உரித்தான மோட்டார் சைக்கில் 02 உம், கள உத்தியோகத்தர்களின் பொருட்டு வழங்கப்பட்டுள்ள 21 மோட்டார் சைக்கில்கள் போன்றன உள்ளன. பண்ணைகள் பொருட்டு 03 டெக்டர்களும் ஆயுதப் படையனியினருக்கு (இரண்டு சில்லு டெக்டர் 12 பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. சந்தைக் கருத்திட்டத்தின் பொருட்டு உள்ள பெரிய லொரி 01 மற்றும் போலேரோ லொரி 01 உம் ஆக மொத்தமாக வாகனம் 55 உள்ளன.

## இலங்கை ஹுதபிம அதிகாரசபை

## 2015 ஆம் ஆண்டு பணிப்பாளர் சபை ஒன்றுகூடல் இடம் பெற்ற திகதிகள்

| | பணிப்பாளர் சபை | பணிப்பாளர் சபை ஒன்றுகூடல் இடம் பெற்ற திகதிகளும் பங்குபற்றியோரும். | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 27.02.2015 | 26.03.2015 | 24.04.2015 | 20.05.2015 | 29.06.2015 | 27.07.2015 | 24.08.2015 | 06.11.2015 | 24.11.2015 | 29.12.2015 |
| 1 | திரு.நந்தசேன ஹேரத்<br>தலைவர். இலங்கை ஹுதபிம அதிகார சபை | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| 2 | திரு.பீ.அஜித் புஸ்பகுமார<br>உப தலைவர் இலங்கை ஹுதபிம அதிகார சபை | √ | √ | 0 | √ | √ | 0 | 0 | √ | √ | √ |
| 3 | திரு.ரன்ஜன் தர்மவர்த்தன அமைச்சின் பிரதி நிதி<br>பணிப்பாளர் சபை உறுப்பினர் | √ | √ | √ | √ | - | - | - | - | - | - |
| 4 | திருமதி சான்தினி கொங்கஹுகே.<br>பணிப்பாளர் சபை உறுப்பினர் | √ | √ | √ | 0 | √ | 0 | 0 | √ | √ | √ |
| 5 | திரு.டி.எம்.சிறிசென திசாநாயக்க<br>பணிப்பாளர் சபை உறுப்பினர் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| 6 | திரு.டி.என்.டி.நுகவெல<br>பணிப்பாளர் சபை உறுப்பினர் | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ |
| 7 | திரு.எச்.எம்.பி.ஹிடிசேகர திரைசேறி பிரதி நிதி<br>பணிப்பாளர் சபை உறுப்பினர் | - | - | - | - | 0 | √ | √ | 0 | √ | √ |
| 8 | பேராசிரியர் எச்.எம்.எஸ்.ஹீன்கெந்த-<br>அமைச்சின் பிரதி நிதி<br>பணிப்பாளர் சபை உறுப்பினர் | - | - | - | - | - | - | - | √ | 0 | 0 |

வருகை தந்தோர் : √

வருகை தராதோர் : 0

நியமிக்கப்படவில்லை : -

## இலங்கை ஹுதபிம அதிகார சபையின் பதவியணியினர் விபரம்
## 2015.12.31 ஆம் திகதி அன்று உள்ளவாறு

| தொ. இல | பதவிப் பெயர் | அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் | தற்போதுள்ள எணணிக்கை. | 2015.12.31 ஆம் திகதி வெற்றிடம் | 2016 இல் ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனுமதி |
|---|---|---|---|---|---|
| 1 | நிறைவேற்றுப் பணிப்பாளர் | 1 | 1 | - | - |
| 2 | உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | 1 | 1 | - | - |
| 3 | உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) | 1 | 1 | - | - |
| 4 | உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (நிதி) | 1 | 1 | - | - |
| 5 | உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) | 1 | 1 | - | - |
| 6 | உதவிப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் (கருத்திட்டம் மற்றும் திட்டமிடல்) | 1 | 1 | - | - |
| 7 | நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 | - | - |
| 8 | நிதி உத்தியோகத்தர் | 1 | - | 1 | - |
| 9 | சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் | 1 | 1 | - | - |
| 10 | விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2 | - | 2 | - |
| 11 | உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் | 1 | 1 | - | - |
| 12 | வலய உத்தியோகத்தர் | 12 | 8 | - | 4 |
| 13 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 1 | - | - | 1 |
| 14 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) | 35 | 17 | 8 | 10 |
| 15 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுடபம் சாராத) | 19 | 16 | 1 | 2 |
| 16 | சிறாப்பர் | 1 | 1 | - | - |
| 17 | இயந்திர இயக்குனர் | 2 | 1 | - | 1 |
| 18 | ஒளி ஒலி உதவியாளர் | 1 | 1 | - | - |
| 19 | சாரதி | 14 | 12 | 2 | - |
| 20 | அலுவலக பணி உதவியாளர் | 4 | 4 | - | - |
| 21 | வாகன உதவியாளர் | 3 | 2 | - | 1 |
| 22 | தொழில்நுட்ப உதவியாளர் | 2 | - | - | 2 |
| 23 | காப்பாளர் | 4 | 4 | - | - |
| 24 | தொழிலாளி | 2 | 1 | 1 | - |
| | மொத்தம் | **112** | **76** | **15** | **21** |

## ஹதபிம அதிகாரசபை

## நிறுவன ஒழுங்கமைப்பு



# அபிவிருத்தி வேலைத்திட்டம்

# 2015 செயற்பாட்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

## 01 விவசாயிகளை வலுப்பெறச் செய்தல்

அதிகார சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் அனைத்தும் செயற்படுத்தப்படுவது சமூக பங்குபற்றுகையுடன் அபிவிருத்தி முறைமையின் ஊடாகவாகும். இதன் பொருட்டு சமூகத்தை வலுப்பெறச் செய்வது அத்தியவசியமான தேவைப்பாடாகும். அதன் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள் செயற்படுத்த முடியுமாக இருந்தது.

### i. ஆரம்ப பாதுகாப்புத் திட்டமிடல்

இலங்கை ஹதபிம அதிகார சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் பொருட்டு இலக்காகக் கொண்ட கிராமங்களை இனங்கண்டதன் பின்னர் அந்த கிராமங்களுக்கு தேவையான பாதுகாப்பு திட்டமிடல்களை தயார் செய்து கொள்வதன் பொருட்டு அந்த கிராமங்களில் உழவர் சமூகத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற முறையான கலந்துறையாடலாக இந்த வேலைத் திட்டத்தை அறிமுகம் செய்து வைக்க முடியும். இந்த கலந்துரையாடல்களின் போது அந்த கிராமங்களில் பௌதீக மற்றும் மானிட வளத்தினைப் போலவே கிராமத்தின் காலநிலை மற்றும் நிலத்தின் தன்மை போன்ற சூழல் விடயங்கள் தொடர்பாகவும் புரிந்துணர்வை பெற்றுக் கொள்வதன் பொருட்டு சமூக பங்குபற்றுகையானது அபிவிருத்தி செயற்பாட்டின் நுழைவிற்குத் தேவையான முறைமைகளை பயன்படுத்திக் கொள்வதற்கு உரிய பாதுகாப்பு திட்டமிடல்கள் மற்றும் கருத்திட்ட செயற்பாடுகள் தொடர்பாகவும் தேவையான கால அட்டவணை தயாரித்துக் கொள்வதற்கு பெறும் துனையாக அமைகின்றது என்பதை குறிப்பிடலாம். இந்த சமூகத்தினால் சமூகத்தின் தேவைக்காகவே தயார் செய்யப்படுகின்ற அபிவிருத்தி திட்டமிடல்களாக அமைவதுடன் அங்கு மிகவும் அத்தியவசியமாக விலங்குகின்றமை தெளிவாக விலங்குவதால் இந்த திட்டமிடல்களை பயன்படுத்தி செயன்முறையில் அமுலாக்கல் செய்கின்ற போது மிகவும் வெற்றிகரமாக அமைகின்றது எனலாம்.

| செயற்பாடு | அலகு | இலக்கு | | முன்னேற்றம் | | வீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி ரூ.மி | பௌதீக | நிதி ரூ.மி | பௌதீக | |
| ஆரம்ப பாதுகாப்புத் திட்டமிடல் | வேலைத்திட்டம் | 0.425 | 85 | 0.386 | 80 | 91 % |
| | உழவர்கள் | | 12500 | | 9800 | 78 % |





### ii. சமூக தலைமைத்துவ அபிவிருத்தி வேலைத்திட்டம்

இலங்கை ஹுதபிம அதிகார சபையின் காணி புணர்நிர்மானம் மற்றும் அபிவிருத்தி திட்டமிடல் கிராமிய மட்டத்தில் செயற்படுத்துவதன் பொருட்டு சமூகத்தின் தலைமைத்துவத்தை பெற்றுக் கொள்வதன் நோக்கில் இந்த வேலைத் திட்டத்திம் செயற்படுத்தப்படுகின்றது. அத்துடன் இங்கு ஆரம்ப திட்டமிடல் துறையில் வேலைத் திட்டங்களின் ஊடாக அதிகளவில் தலைமைத்துவத் திறனை கொண்டுள்ள நபர்களை இனங்கண்டு அவர்களின் பொருட்டு தலைமைத்துவ அபிவிருத்தி தொடர்பில் முறையான தங்குமிட வசதிகளுடனான பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் பின்னர் இவர்கள் சுயேட்சை அடிப்படையில் அதிகார சபையின் அபிவிருத்தி திட்டமிடல்களில் கிராமிய மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்ற அலகு முகாமையின் போது அவர்களை உதவிக் குழுவினராக நடவடிக்கை மேற்கொள்வதன் பொருட்டு சமூக மயப்படுத்தப்படுவர்.

| செயற்பாடு | அலகு | இலக்கு | | முன்னேற்றம் | | வீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி ரூ.மி | பௌதீக | நிதி ரூ.மி | பௌதீக | |
| சமூக தலைமைத்துவ அபிவிருத்தி வேலைத்திட்டம் | வேலைத்திட்டம் | 0.100 | 10 | 0.0979 | 09 | 97 % |
| | உழவர்கள் | | 400 | | 453 | 113 % |





### iii. உழவர் சமூகத்தின் பொருட்டு மண்ணரிப்பு பாதுகாப்பு தொடர்பில் தொழில்நுட்ப பயிற்சி வேலைத்திட்டம்

இலங்கை ஹுதபிம அதிகார சபையின் மண்ணரிப்பு பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் பொருட்டு இனங்காணப்படுகின்ற உழவர் சமூகத்தின் பொருட்டு மண்ணரிப்பு பாதுகாப்பு துறையில் புதிய தொழில்நுட்ப அறிவினை எடுத்துச் செல்லும் நோக்கில் கள மட்டத்தில் இந்த பயிற்சி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. இங்கு மண்ணரிப்பு பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பில் தலைமைத்துவ மற்றும் செயன்முறை பயிற்சி உழவர் சமூகத்தின் பொருட்டு அவர்களது களத்திலேயே செயற்படுத்தவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

| செயற்பாடு | அலகு | இலக்கு | | முன்னேற்றம் | | வீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி ரூ.மி | பௌதீக | நிதி ரூ.மி | பௌதீக | |
| உழவர் சமூகத்தின் பொருட்டு மண்ணரிப்பு பாதுகாப்பு தொடர்பில் தொழில்நுட்ப வேலைத் திட்டம் | வேலைத் திட்டம் | 0.425 | 85 | 0.319 | 83 | 98 % |
| | உழவர்கள் | | 12500 | | 7940 | 64 % |




மண்ணரிப்பு பாதுகாப்பு தொடர்பில் தொழில்நுட்பப் பயிற்சி வேலைத்திட்டம்

**02. மண்ணரிப்பு பாதுகாப்பு மற்றும் நீர்வரப்பு முகாமை**

**i. மண்ணரிப்பு பாதுகாப்பு மாதிரிகளை ஸ்தாபித்தல்**

மண்ணரிப்பு பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பில் உழவர் சமூகத்தை அறிவூட்டும் பொருட்டு செயற்படுத்தப்படுகின்ற வேலைத் திட்டங்களின் ஒரு முறையாக இந்த வேலைத்திட்டம் கருத்திட்ட அதிகார பிரதேசத்தினுள் செயற்படுத்தப்படுகின்றது. இங்கு உழவர் சமூகத்திற்கு அவதானிக்க இயலுமாக உள்ள பொது இடங்களை இனங்கண்டு அவற்றினை விஞ்ஞான ரீதியான மற்றும் தொழில்நுட்ப மண்ணரிப்பு பாதுகாப்பு முறை மாதிரியை ஸ்தாபித்தல் இந்த கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த மாதிரியை ஸ்தாபிப்பதன் பொருட்டு காணி பயன்பாடு திட்டமிடலில் தொழில்நுட்பத்தினையம் இனக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன.

| செயற்பாடு | அலகு | இலக்கு | | முன்னேற்றம் | | வீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி ரூ.மி | பௌதீக | நிதி ரூ.மி | பௌதீக | |
| மண்ணரிப்பு பாதுகாப்பு மாதிரியை ஸ்தாபித்தல் | மாதிரி | 2.10 | 42 | 1.152 | 25 | 60 % |



மண்ணரிப்பு பாதுகாப்பு மாதிரி ஸ்தாபிப்பதற்கு முன்னர்



மண்ணரிப்பு பாதுகாப்பு மாதிரி ஸ்தாபித்ததன் பின்னர்

ii. **"மாணவ அறிவு காப்பரன்" பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட சூழல் பாதுகாப்பு வேலைத் திட்டம்**

மண்ணரிப்பு பாதுகாப்பு சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வள முகாமை தொடர்பான அறிவு எண்ணக்கரு, திறன் என்பவற்றை மாணவர்கள் மத்தியில் அபிவிருத்தி செய்வதன் பொருட்டு சூழல் பாதுகாப்பு தொடர்பில் ஆக்கபூர்வமான எண்ணக்கருவை மாணவர்கள் மத்தியில் விருத்தி செய்வதன் பொருட்டு மற்றும் மணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோார் ஆகியோரை அறிவூட்டுவதன் நோக்கில் இந்த கருத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது. இதன் பொருட்டு மாணவர்களை அறிவூட்டும் வேலைத் திட்டங்கள் மற்றும் பாடசாலைகளிலும் மண்ணரிப்பு பாதுகாப்பு மாதிரிகளை ஸ்தாபிக்கப்படுகின்றது.

| செயற்பாடு | அலகு | இலக்கு | | முன்னேற்றம் | | வீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி ரூ.மி | பௌதீக | நிதி ரூ.மி | பௌதீக | |
| பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டம் | வேலைத்திட்டம் | 1.5 | 60 | 0.813 | 23 | 92 % |
| | மாணவர்கள் | | 7500 | | 4782 | 64 % |



மண்ணரிப்பு பாதுகாப்பு தொடர்பான விரிவுரை நடாத்தும் சந்தர்ப்பம்



மண்ணரிப்பு பாதுகாப்பு மாதிரி நிர்மானத்தின் பின்னர்.

**iii. நீர் மூலங்கள் மற்றும் நீர் நிலைகளின் பாதுகாப்பு**

மத்திய மலைநாட்டின் மற்றும் அது சார்ந்த பிரதேசங்களினுள் ஹதபிம அதிகார சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்ற பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் இனங்காணப்பட்ட சூழல் ரீதியில் மிகவும் கூடியவகையில் உணரக்கூடிய நீர் மூலங்கள் மற்றும் நீர் நிலைகள் என்பவற்றை பாதுகாக்கும் வேலைத் திட்டங்கள் 2015 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது. விஷேடமாக மனிதச் செயற்பாடுகளின் காரணமாக அழிவுக்குட்படுத்தப்படுகின்ற நீர் நிலைகள் மற்றும் நீர் மூலங்களை பாதுகாக்கும் பொருட்டு இந்த கருத்திட்டம் செயற்படுத்தவதன் நோக்கில் அமைந்துள்ளதுடன் அவ்வாறான நீர் நிலைகளை பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான பிரமானங்கள் தயார் செய்யப்பட்டு தேவையான நீர் தாவரங்களின் எண்ணிக்கையை விருத்தி செய்வதன் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதானது இந்த பாதுகாப்பு கருத்திட்ட செயற்பாட்டின் போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| செயற்பாடு | அலகு | இலக்கு | | முன்னேற்றம் | | வீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி ரூ.மி | பௌதீக | நிதி ரூ.மி | பௌதீக | |
| நீர் மூலங்கள் மற்றும் நீர் நிலைகளின் பாதுகாப்பு | நீர் நிலைகள் | 2.5 | 25 | 1.724 | 23 | 92 % |


நீர் மூலங்கள் மற்றும் நீர் நிலைகள் பாதுகாப்பதற்கு முன்னர்


நீர் மூலங்கள் மற்றும் நீர் நிலைகள் பாதுகாப்பதற்கு பின்னர்

### iv. மண்ணரிப்பு பாதுகாப்பு கட்டமைப்பை ஸ்தாபிப்பதன் வேலைத் திட்டம்

இலங்கை ஹதபிம அதிகார சபையின் முன்னுரிமை செயற்பாடுகளாக இந்த பாதுகாப்பு வேலைத் திட்டங்கள் இனங் காணப்பட்டுள்ளதுடன் இலங்கை ஹதபிம அதிகார சபைக்கு வருடாந்தம் கிடைக்கப் பெறுகின்ற நிதி ஒதுக்கீட்டின் அளவிற்கு அமைய பாதுகாப்பின் பொருட்டு இனங்காணப்பட்டுள்ள காணிகளில் ஹெக்டேயரின் அளவு வேறுபடும். 2015 ஆம் ஆண்டு பாதுகாப்பின் பொருட்டு இனங்காணப்பட்ட காணிகள் ஹெக்டேயர் அளவு 5750 ஆகும். இந்த காணிகளில் மன்னரிப்பு நிலமையை குறைத்துக் கொள்வதன் நோக்கில் முறையான மண்ணரிப்பு பாதுகாப்பு முறையில் ஈடுபடும் பொருட்டு உழவர் சமூகம் ஈடுபட்டதுடன் மண்ணரிப்பு பாதுகாப்பு நடவடிக்கையினை வெற்றிகரமாக மடிவுருத்திய விவசாயிகளுக்கு பாதுகாப்புக் கொடுப்பனவாக 01 ஹெக்டேயருக்காக ரூபா 10,000/- நிதி தொகை இதன் பொருட்டு இடர் கொடுப்பனவாக பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| செயற்பாடு | அலகு | இலக்கு | | முன்னேற்றம் | | வீதம் |
|---|---|---|---|---|---|---|
| | | நிதி ரூ.மி | பௌதீக | நிதி ரூ.மி | பௌதீக | |
| மண்ணரிப்பு பாதுகாப்பு கட்டமைப்பு ஸ்தாபிக்கும் வேலைத் திட்டம் | ஹெக்டேயர் | 57.10 | 5750 | 17.27 | 3113.2 | 54 % |


சிறுகாண்


கல்வேளி


மண்வேளி

**03. திட்டமிடல் மற்றும் செயலாற்றுகை மீளாய்வு**

**i. செயலாற்றுகை மீளாய்வு ஒன்றுகூடல்கள்**

இலங்கை ஹுதபிம அதிகார சபையின் மொத்த அபிவிருத்தி வேலைத் திட்டத்தினதும் செயற்பாடுகள் தொடர்பில் மாதாந்தம் சகல துறை ரீதியான முகாமையாளர்களது பங்குபற்றுகையுடன் அதிகார சபையின் தலைவர் நந்தசேன ஹேரத் அவர்களது தலைமையின் கீழ் செயலாற்றுகை மீளாய்வு ஒன்று கூடல்கள் 10 இடம் பெற்றன.

| செயற்பாடு | இலக்கு | | முன்னேற்றம் | | வீதம் |
|---|---|---|---|---|---|
| | நிதி ரூ.மி | பௌதீக | நிதி ரூ.மி | பௌதீக | |
| செயலாற்றுகை மீளாய்வு ஒன்று கூடல் | 0.150 | 12 | 0.128 | 10 | 75 % |

**04. நிறுவன மனித மற்றும் பௌதீக வள அபிவிருத்தி**

**i. மனிதவள அபிவிருத்தி**

இலங்கை ஹுதபிம அதிகார சபையின் பதவியனியினர் மற்றும் களப் பதவியனியினர் ஆகியோரது அறிவு மற்றும் திறன் மேம்பாட்டின் பொருட்டு 2015 ஆம் ஆண்டு பயிற்சி வேலைத் திட்டங்கள் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு இருந்ததுடன் துரை முகாமைத்துவத்தின் பொருட்டு விடயவிதான பயிற்சி வேலைத் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் பதவியனியினர் உத்தியோகத்தர்கள் பொருட்டு செயற்பாட்டுப் பயிற்சி வேலைத் திட்டங்கள் இந்த பயிற்சி வேலைத் திட்டத்தின் கீழ் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டன.

| செயற்பாடு | இலக்கு | | முன்னேற்றம் | | வீதம் |
|---|---|---|---|---|---|
| | நிதி ரூ.மி | பௌதீக | நிதி ரூ.மி | பௌதீக | |
| பயிற்சி வேலைத் திட்டங்கள் | 0.700 | 06 | 0.604 | 6 | 86 % |

**ii. நிறுவன அபிவிருத்தி**

இலங்கை ஹுதபிம அதிகார சபையின் பிரதான பணிமனையின் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் பொருட்டு 2015 ஆம் ஆண்டினுள் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

| செயற்பாடு | இலக்கு | | வீதம் |
|---|---|---|---|
| | நிதி ரூ.மி | பௌதீக | |
| பௌதீக வள அபிவிருத்தி | 0.850 | 1.190 | 140 % |

**05. ஊடக மற்றும் விளம்பர வேலைத் திட்டம்**

இலங்கை ஹுதபிம அதிகார சபையின் ஊடாக செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் பொது மக்களை அறிவூட்டுவதன் நிமித்தம் மின்னியல் மற்றும் அச்சூடக வேலைத் திட்டங்கள் 2015 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்டது. அத்துடன் அந்த வேலைத் திட்டங்கள் தொடர்பில் காணப்பட்ட செயலாற்றுகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

| செயற்பாடு | இலக்கு | |
|---|---|---|
| | நிதி ரூ.மி | பௌதீக |
| ஊடக மற்றும் விளம்பர வேலைத் திட்டம் | 1.5 | 0.202 |

## 06. விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல்

இலங்கை ஹதபிம அதிகார சபையினால் மண்ணரிப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் முடிவுற்றதும் பயிர்ச் செய்கை அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற பசுமை புல் கிராமங்களில் உழவர்கள் விவசாய உற்பத்திகளை இடைத் தரகர்களது ஈடுபாட்டுடன் இன்றி சாதாரண விலைக்கு சந்தைப்படுத்தலில் உள்ள பிரச்சினைகள் அதிகார சபையினால் பலகாலமாக அவதானிக்கப்பட்டு வந்த பிரச்சினையாகும். இந்த நிலமையை குறைத்துக் கொள்வதன் பொருட்டு 2000 ஆம் ஆண்டு இலங்கை ஹதபிம அதிகார சபையின் விவசாய உற்பத்திகளின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு வேலைத் திட்டம் கிராமிய விவசாய உற்பத்தியின் பொருட்டு அதிக விலை பெற்றுக் கொடுத்தல் நகர நுகர்வாளர் பொருட்டு சாதாரண விலைக்கு விவசாய உற்பத்திகளை வழங்குதல் அறுவடைக்குப் பின்னரான நட்டத்தை குறைத்துக் கொள்ளல் பாரம்பரிய உணவுகள் பயன்படுத்துவதை பிரபல்யப்படுத்துதல் கிராமத்தில் வேலையற்று உள்ள இளைஞர் யுவதிகள் பொருட்டு தீர்வு பெறும் வகையில் இலக்காகக் கொண்டு செயற்படுதல் இந்த கருத்திட்டம் பல்வேறு வகையில் மேற்கொண்டதன் பின்னர் இற்றைக்கு மிகவும் விருத்தி அடைந்த மட்டத்தில் காணப்படுவதுடன் அந்த வேலைத் திட்டங்கள் 2015 ஆம் ஆண்டினுள் பெறப்பட்ட வெற்றிகரமான நிலைமை தொடர்பில் தகவல்கள் பின்வருமாறு அட்டவணைப்படுத்தி தரப்படுகின்றன.

| விடயம் | ரூபா |
|---|---|
| விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்தல் | 100,444,986.57 |
| விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்தல் | 121,908,528.80 |
| ஸ்தாபிக்கப்பட்டுள்ள விவசாய ஒழுங்கமைப்புக்களின் எண்ணிக்கை | 13.00 |
| ஹதபிம உழவர் பொறுப்பு நிதியில் உள்ள நிதியின் அளவு | 521,243.76 |





## 07. திட்டமிடல் மற்றும் செயலாற்றுகை மீளாய்வு

- **அபிவிருத்தி திட்டமிடல்**

இலங்கை ஹதபிம அதிகார சபையின் அடுத்த ஆண்டின் பொருட்டு உள்ள அபிவிருத்தி திட்டமிடல் தயாரிக்கையில் தொடர்பான வேலையரங்குகள் ஒவ்வொரு ஆண்டும் ஒழுங்கு செய்யப்படுவதுடன் 2016 ஆம் ஆண்டின் பொருட்டு அபிவிருத்தி திட்டமிடல் தயாரிக்கும் பொருட்டு வேலையரங்குகள் அந்தந்த துறைக்கு உரிய விடயவிதான நிபுனர்களது, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் துறைக்கு உரிய நிறுவனத் தலைவர்களது பங்குபற்றுகையுடன் கடந்த டிசம்பர் மாதத்தில் இந்நிகழ்வு வெற்றிகரமாக இடம் பெற்றன.

# சந்தைப்படுத்தல் கருத்திட்டம்

# சந்தை மேம்பாட்டுக் கருத்திட்டம் - 2015

**நுகர்வோர் சேவை**

இலங்கை ஹதபிம அதிகார சபையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு இனைவாக களத்தில் அமையப் பெற்றுள்ள உழவர் ஒழுங்கமைப்புக்களில் இருந்து அறுவடைக்குப் பின்னரான பாதிப்பை குறைத்துக் கொண்டு பாதுகாப்பான வகையில் அறுவடையை கொண்டு வருவதாகும். அவ்வாறான விவசாய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முன்னர் மீண்டும் தரப் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்டு தூய மற்றும் தரமான அடிப்படையில் தரமான விவசாய பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அந்த விவசாய பொருட்களை சலுகை விலைக்கு சந்தைப்படுத்தல் மேற்கொள்ளப்படுவதுடன் பாரம்பரிய உணவு வகைகளை அறிமுகம் செய்து வைத்தல் என்பவற்றுடன் அவற்றினை பிரபள்யப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. சந்தைப்படுத்தலின் பின்னர் மீதமாகின்ற விவசாய மூலப் பொருட்கள் ஹதபிம பண்ணைகளில் சேதன பசளைகளின் பொருட்டும் பல்கலைக்கழக பண்ணைகளுக்கான கால்நடைகளுக்கான உணவாகவும் நாம் வழங்குவதுடன் வீனாகுவதை பொருளாதாரத்திற்கு திறனாக ஈடுபடுத்திக் கொள்வதற்காகவும் ஆகும். இந்த சகல செயற்பாடுகளும் அரசாங்க நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பொறுப்பாகக் கருதி உச்ச அளவில் மேற்கொள்வதன் பொருட்டு சேவை சூழலுக்கு அமைவாக புரிந்துணர்வுடன் நுகர்வோரை உபசரிப்பதோடு நடாத்திச் செல்லப்படுகின்ற எமது சந்தைப்படுத்தல் கருத்திட்டத்தின் ஆரம்ப நோக்கத்தை அடைந்து கொள்வதன் மூலமாகவாகும்.

### சந்தை மேம்பாட்டு கருத்திட்டத்தின் நோக்கங்கள்

01. நச்சுத் தன்மையற்ற விவசாய உற்பத்திகளை மேம்படுத்தும் பொருட்டு உழவர் சமூகத்தை உயிர் பெறச் செய்தல்
02. கிராமிய விவசாய உற்பத்தியின் பொருட்டு விவசாயிகளுக்கு உச்ச விலையை பெற்றுக் கொடுத்தல்
03. நகர நுகர்வாளருக்கு உயர் தரத்தினாலான விவசாய உற்பத்திகளை வழங்கும் பொருட்டு பாரம்பரிய உணவு உற்பத்தியை பிரபல்யப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
04. அறுவடைக்குப் பின்னர் ஏற்படுகின்ற பாதிப்பை குறைத்துக் கொள்வதன் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளல்
05. கிராமத்தில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

### தற்போதைய தற்துணிவு

ஆரம்ப நோக்கங்களை அடைந்துக் கொள்வதன் பொருட்டு நாடு உணவில் தன்னிறைவு அடையும் நோக்கில் அடைந்து கொள்வதன் பொருட்டு விவசாய அமைச்சின் செயற்பணிக்கு அமைய சுகாதார வளம் பெற்ற சமூகத்தை உருவாக்குவதன் நிமித்தம் நாடளாவிய ரீதியில் சந்தைப்படுத்தல் வளையம் ஒன்றின் ஊடாக நுகர்வோரது தேவைப்பாட்டினை அடைந்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

### *இலங்கை ஹதபிம அதிகார சபை*
### *சந்தை மேம்பாட்டுக் கருத்திட்டம்*
### *பதிவு செய்யப்பட்ட தனியார் வழங்குனர்கள் - 2015*

**வழங்குகின்ற பொருட்களுக்கு அமைய**

| தொடர் இலக்கம் | வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மறக்கறி வழங்குதல் | 44 |
| 2 | கன்றுகள் வழங்குதல் | 22 |
| 3 | விசுரும் பொருட்கள் (போத்தல், பக்கற்) | 59 |
| **மொத்த வழங்கனர்களின் எண்ணிக்கை** | | **125** |

## சேவை நிலைப்பாடு மற்றும் சேவை பாதுகாப்பு

அனுமதிக்கப்பட்ட பதவியனியினர் - 35

சந்தைப்படுத்தல் கருத்திட்டத்திற்கு உரியவாறான 2015 ஆம் ஆண்டு நேரடியாக சேவையில் ஈடுபட்டிருந்த 32 பேரிட்கும் மேலாக அதிகமான அளவினர் சுழற்சி முறை பங்களிப்பில் உள்ளனர். அதில் தற்போது நேரடியாக சேவையில் ஈடுபட்டுள்ள சேவை பாதுகாப்பின் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஊழியர் நலனோம்பல் செயற்பாட்டை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஊழியர் நலனோம்பல்**

**01. சேமலாப நிதி ஒதுக்கம்**

- ஹதபிம சந்தை பதவியனியினரின் கவன ஒழுங்கமைப்பு நிதி - 2,015,767.16
- சந்தை பதவியனியினரின் நலனோம்பல் சேவை - 404,868.18

**02. ஊழியர் கடன் பெற்றுக் கொடுத்தல்**

- இடர் கடன் - 75,000.00
- உடன் கடன் - 7,500.00
- 03 மாத சம்பளக் கடன் - 3 (ஆரம்ப சம்பளம்)

## 2015.01.01 ஆம் திகதி முதல் 2015.12.30 வரையிலான முன்னேற்றம்

| தொடர் இலக்கம் | மாதம் | கொள்வனவு | விற்பனவு |
|---|---|---|---|
| 1 | ஜனவரி | 11,355,679.88 | 12,877,167.22 |
| 2 | பெப்ரவரி | 9,575,502.42 | 11,147,193.80 |
| 3 | மார்ச் | 9,602,156.40 | 11,617,090.41 |
| 4 | ஏப்ரல் | 5,998,597.20 | 7,815,427.42 |
| 5 | மே | 6,670,028.20 | 8,544,125.69 |
| 6 | ஜூன் | 9,029,360.65 | 10,321,152.59 |
| 7 | ஜூலை | 8,573,991.25 | 10,626,678.63 |
| 8 | ஆகஸ்ட் | 7,599,955.41 | 9,414,601.32 |
| 9 | செப்டம்பர் | 6,539,092.31 | 8,440,220.65 |
| 10 | ஒக்டோபர் | 7,123,831.29 | 9,325,542.62 |
| 11 | நவம்பர் | 9,657,958.20 | 11,162,773.48 |
| 12 | டிசம்பர் | 9,032,974.06 | 10,941,238.39 |
| **மொத்தம்** | | **100,759,127.27** | **122,233,212.22** |

2015.01.01 – 2015.12.31 வரையிலான முன்னேற்றம்



# இலங்கை ஹதபிம அதிகார சபை

## சந்தை மேம்படுத்தல் செயற்திட்டம்

## பதிவு செய்யப்பட்ட பசுமைத் தோட்ட உழவர் சங்கம் - 2015 ஆம் ஆண்டு

| தொடர் இலக்கம் | உழவர் சங்கத்தின் பெயர் | உழவர் எண்ணிக்கை | கொள்வனவுப் பெறுமதி |
|---|---|---|---|
| 01 | வத்தேகெதர பசுமைத் தோட்ட உழவர் சங்கம்<br>வத்தேகெதர, கல்அதர | 87 | 1,941,382.50 |
| 02 | ரத்தோட்டை பசுமைத் தோட்ட உழவர் சங்கம்<br>கைகாவலை, மாத்தளை | 17 | 3,148,395.90 |
| 03 | ஹிம்புட்டுகெல்லேவ பசுமைத் தோட்ட உழவர் சங்கம்<br>ஹிம்புட்டுகெல்லேவ, உப்புல்தெனிய | 20 | 3,066,351.65 |
| 04 | புலுகஹபிடிய பசுமைத் தோட்ட உழவர் சங்கம்<br>புலுகஹபிடிய, நுவரெலிய | 23 | 3,635,696.25 |
| 05 | ரொடவெவ பசுமைத் தோட்ட உழவர் சங்கம்<br>கலேவலை, மாத்தளை | 50 | 2,054,986.00 |
| 06 | ரஜ்ஜம்மான பசுமைத் தோட்ட உழவர் சங்கம்<br>மடவல உல்பத்த, மாத்தளை | 21 | 936,028.50 |
| 07 | மல்லவ பிடிய பசுமைத் தோட்ட உழவர் சங்கம்<br>மாவத்தகம, குருணாகலை | 14 | 284,065.25 |
| 08 | தம்புத்தேகம பசுமைத் தோட்ட உழவர் சங்கம்<br>சுதார்ஷனாகம, ஹுரிகஸ்வெவ | 18 | 732,380.00 |
| 09 | போகமுவ பசுமைத் தோட்ட உழவர் சங்கம்<br>போகமுவ, ரிக்கில்லகஸ்கட | 115 | 2,999,582.95 |
| 10 | யடவத்தை பசுமைத் தோட்ட உழவர் சங்கம்<br>யடவத்தை, மாத்தளை | 25 | 980,005.74 |
| 11 | மாகொடை பசுமைத் தோட்ட உழவர் சங்கம்<br>மாகொடை, நுவரெலியா | 22 | 3,098,935.00 |

## இலங்கை ஹதபிம அதிகார சபையின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு வேலைத்திட்டம் 2008 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான முன்னேற்றம்

| விபரம் | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| விற்பனை | 63,416,558.06 | 70,622,665.94 | 83,415,551.96 | 96,996,133.59 | 107,095,443.68 | 114,893,408.11 | 113,500,930.94 | 122,613,763.29 | 772,554.455.47 |
| கொள்வனவு | 53,810,289.99 | 58,158,971.64 | 69,167,508.44 | 78,181,732.99 | 85,691,731.78 | 95,139,121.96 | 89,161,804.58 | 100,494,409.17 | 629,805,570.55 |
| மொத்த இலாபம் | 10,041,173.87 | 12,580,209.98 | 14,151,150.08 | 18,286,846.96 | 21,682,690.25 | 21,307,054.35 | 24,096,107.32 | 23,590,325.45 | 145,735,558.26 |
| செலவு | 10,048,684.85 | 11,121,577.18 | 12,487,941.28 | 13,562,209.56 | 14,296,392.46 | 18,437,705.92 | 27,657,824.84 | 20,009,217.34 | 127,621,553.43 |
| தேறிய இலாபம் | 4,873,631.00 | 1,518,032.80 | 1,792,711.80 | 5,106,858.41 | 8,100,955.18 | 4,249,826.99 | 1,662,788.48 | 3,555,804.22 | 30,860,608.88 |

இலங்கை ஹதபிம அதிகார சபையின் சந்தை மேம்படுத்தல் வேலைத் திட்டம்
2008 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான செயலாற்றுகை



# இலங்கை ஹதபிம அதிகாரசபை
# சந்தை மேம்பாட்டு கருத்திட்டம்
# அரசம ற்றம் தனியார் நிறுவனங்கள் 2015

| தொடர் இலக்கம் | நிறுவனத்தின் பெயர் |
|---|---|
| 01 | விவசாய திணைக்களம், பேராதனை |
| 02. | Protected Agriculture Association |
| 03. | ஆயுதப்படையினர் முகாம், 11 ஆவது படைப்பிரிவு தலைமையகம், பல்லேகல |
| 04. | அதிகாரசபையின் எலிமஹுன் சிறைக்கூடம், சிறைச்சாலை திணைக்களம் குண்டசாலை |
| 05. | நிலைய பொறுப்பு உத்தியோகத்தர், ஹதபிம பண்ணை, பல்லேகலை |
| 06. | நிலைய பொறுப்பு உத்தியோகத்தர், ஹதபிம பண்ணை, கொத்மலை |
| 07. | நிலைய பொறுப்பு உத்தியோகத்தர், ஆயுதப் படையினர் முகாம், வவுனியா |
| 08. | முகாமையாளர், பீதுருதலாகலை பண்ணை, விவசாய திணைக்களம் நுவரெலியா. |

# நிதி அறிக்கை

## இலங்கை ஹுதபிம அதிகாரசபை

